0 116

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,

முன்-பள்ளி கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம்

இரண்டாம் அரையாண்டு இறுதிப் பரீட்சை 2007

**ESC 1128/1139 –** முன் பாடசாலை, குழந்தை காப்பகங்களை ஒழுங்கமைத்தலும் பேணலும், முகாமைப்படுத்துவப் படுத்தலும் வீட்டிற்கும் பாடசாலைக்குமிடையிலான தொடர்பும் பெற்றோர்களின் பங்களிப்பும்.

காலம்: இரண்டு(02) மணித்தியாலங்கள்

திகதி: 17.06.2007 நேரம்: மு.ப 10.00 - பி.ப 12.00

நான்கு(04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

1. முன்பள்ளி ஒன்றின் ஆகக்குறைந்த தேவைகள் எவை என்பதை பின்வருவன தொடர்பாக விளக்குக.

   அ. கட்டடங்கள்
   ஆ. தளபாடங்களும் உபகரணங்களும்
   இ. வெளி விளையாட்டுக்களுக்கான வசதிகள்

(8x3+1 = 25 புள்ளிகள்)

2. (அ). பிள்ளைகளுக்கு உச்சக்கற்றல் சந்தர்ப்பங்களை வழங்கக் கூடியவாறு வகுப்பறையொன்றில் இருக்கை வசதிகளை எவ்வாறு ஒழுங்குபடுத்துவீர் என விபரிக்க.

(10 புள்ளிகள்)

   (ஆ) மேலே குறிப்பிடப்பட்டவாறு வகுப்பறையை ஒழுங்குபடுத்துவதால் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை விளக்குக.

(15 புள்ளிகள்)

3. (அ) முன்பள்ளி ஒன்றில் பேணப்பட வேண்டிய ஐந்து வெவ்வேறுவகையான நிறுவனப் பதிவுகளை விளக்குக.

(15 புள்ளிகள்)

   (ஆ) மேலே குறிப்பிடப்பட்ட பதிவுகளைப் பேணுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளைக் கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

4. பின்வருவனவற்றைப் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுக.

   (i) வகுப்பறைச் செயற்பாடுகளுக்காக பிள்ளைகளை குழுக்களாக்குவதால் உள்ள நன்மைகள்
   (ii) குழந்தை காப்பகங்களில் உள்ள குழந்தைப் பராமரிப்பாளர் ஒருவரின் பொறுப்புக்கள்.
   (iii) முன்பள்ளி ஒன்றில் வாராந்த நிகழ்சி திட்டமிடல் இருப்பதால் ஏற்படும் நன்மைகள்.
   (iv) பெற்றோருடன் ஆரோக்கியமான தொடர்பைப் பேணுதலின் முக்கியத்துவம்

(6x4+1 = 25 புள்ளிகள்)

5. (அ) நீங்கள் எவ்வாறு பிள்ளை ஒன்றின் முன்னேற்ற மதிப்பீட்டுப் பதிவைப் பேணுவீர் என விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) முன்பள்ளி ஆசிரியர் ஒருவரின் சுயமதிப்பீட்டு அட்டவணையில் உள்ளடக்கக் கூடிய <u>பத்து</u> விடயங்களை எழுதுக.

(10 புள்ளிகள்)

6. (அ) பெற்றோருக்கான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை நீங்கள் எவ்வாறு ஒழுங்கமைப்பீர்கள் என விளக்குக.

(15 புள்ளிகள்)

(ஆ) பிள்ளைகளின் விருத்தி தொடர்பாக நீங்கள் பெற்றோருக்கு எடுத்துச் சொல்லக்கூடிய <u>இரண்டு</u> முக்கிய தகவல்களை எழுதுக.

(10 புள்ளிகள்)

(பதிப்புரிமை பெற்றது)